நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, சங்ககிரி

முன்னிலை : திருமதி. எஸ்.சத்தியா, பி.ஏ., பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06- ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 11 / 2026**

**(CNR.No. TNSA09-000025-2026)**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | - | அரசு தரப்பில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,<br>சங்ககிரி காவல் நிலையம், கு.எண். 499/2025 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | - | சோமசுந்தரம், த/பெ. தேவராஜ்<br>மாரியம்மன் கோவில் அருகில், நைநாம்பட்டி,<br>ஆட்டையாம்பட்டி, சேலம். |
| வனையப்பட்ட குற்றங்கள் | - | U/s. 281, 125(b) of BNS |
| குற்றம் நிகழ்ந்த நாள் | - | 15.11.2025 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | - | 18.11.2025 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | - | 21.11.2025 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | - | 21.11.2025(Station bail) |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | - | 05.01.2026 |
| எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | - | 19.02.2026 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | - | 03.03.2026 |
| சாட்சிகள் விசாரணை | - | 03.03.2026 |

| | |
|---|---|
| முடிவடைந்த நாள் | |
| பிரிவு.348 BNSS-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | Nil |
| பிரிவு 351(1)(b) BNSS - இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | - 04.03.2026 |
| தலைமறைவு எதிரிகள் குறித்த விவரம் | - Nil |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | - Nil |
| தீர்மானம் | - எதிரி U/s.281,125(b) of BNS - ன் கீழ் குற்றவாளி |
| முடிவு | - இறுதியாக, எதிரிமீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 281, 125(b) of BNS-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் எந்தவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவுசெய்து, எதிரி பிரிவுகள் 281, 125(b) of BNS-ன் கீழ் குற்றவாளியென தீர்மானித்து, எதிரிக்கு பிரிவு 281 of BNS பிரிவின் கீழான குற்றத்திற்கு ரூ.1000/-அபராதமும், அபராதம் கட்டடத்தவறினால் இரண்டு வாரம் மெய்க்காவல் சிறைதண்டனையும், பிரிவு 125(b) of BNS பிரிவின் கீழான குற்றத்திற்கு ரூ.5000/-அபராதமும், அபராதம் கட்டடத்தவறினால் ஒருமாதம் மெய்க்காவல் சிறைதண்டனையும் விதித்து பிரிவு 278(2) of BNSS -ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் ரூ. |

| | |
|---|---|
| | 6000/-. வழக்குச்சொத்து இல்லை. |

இந்த வழக்கு 07.01.2026 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.M. தமிழரசன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

**<u>தீ ர் ப் பு ரை</u>**

**<u>சங்ககிரி காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையின் விவரம்</u>**:

2.1) கடந்த 15.11.2025 - ஆம் தேதி 13.00 மணிக்கு சாட்சி-1 ராஜேஸ்வரி என்பவர் சங்ககிரி காவல் நிலைய சரகம் வைகுந்தம் கிராமம் சந்தைப்பேட்டை பிள்ளையார் கோவில் அருகே வைகுந்தம் to கொங்கணாபுரம் செல்லும் ரோட்டின் இடது ஓரமாக கீழே உட்கார்ந்து பூ வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது அதே ரோட்டில் கொங்கணாபுரம் பக்கமிருந்து வைகுந்தம் நோக்கி வந்த எதிரி TN 90 H 7435 என்ற பதிவெண்கொண்ட MARUTHI HYBRID ZETA காரை அஜாக்கிரதையாக ஓட்டிச்சென்று சாட்சி-1 ன் வலதுகாலின் மீது ஏற்றி விபத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது பிரிவு 281 of BNS - ன் கீழும்,

2.2) மேற்படி அதே தேதி, அதே நேரம், அதே இடத்தில் வைத்து அதே சம்பவத்தின் போது, சாட்சி-1 ராஜேஸ்வரிக்கு கொடுங்காயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது பிரிவு 125 (b) of BNS - ன் கீழும் சங்ககிரி காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், அவருக்கு பிரிவு 230 BNSS கீழ் இவ்வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசம் அளித்த பின்னர் எதிரியிடம் பிரிவுகள். 281, 125(b) of BNS - ன் கீழான குற்றச்சாட்டு குறித்து வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் சாராம்சம் பின்வருமாறு</u>** : -

4.1) இவ்வழக்கில் காயம்பட்ட நபரான அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 03 மாதத்திற்கு முன்பாக, வைகுந்தம் சந்தைபேட்டையில் உள்ள பிள்ளையார் கோவில் முன்பு தான் பூ விற்பனை செய்வதற்காக சென்றிருந்ததாகவும், மதியம் சுமார் 01.00 மணியளவில் தான் பூ கட்டிக்கொண்டிருந்தபோது கார் ஒன்று வேறு பாதையில் செல்வதற்கு பதிலாக தான் அமர்ந்திருந்த பாதையில் ஆர்ன் ஏதும் அடிக்காமல் வந்து தன் வலது காலின் மீது காரை ஏற்றிவிட்டதாகவும், தான் தலை குனிந்து பூ கட்டிக்கொண்டிருந்ததாகவும், கார் வேகமாக வந்ததா என்று தனக்கு

தெரியவில்லை என்றும், தான் சாலையின் வலதுபுறமாக விநாயகர் கோவில் அருகிலேயே அமர்ந்து கொண்டிருந்ததாகவும், ஆஜர் எதிரி தான் மேற்படி காரை ஓட்டிவந்த நபர் என்றும், பின்னர் அடிப்பட்டவுடன் தன்னை அருகில் இருந்தவர்கள் ஆட்டோவின் மூலம் சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், பின்னர் தன் மகள் மேல்சிகிச்சைக்காக திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனையில் சேர்த்ததாகவும், போலீசார் மருத்துவமனை வந்து தன்னிடம் புகார்வாக்குமூலம் (**அ.சா.ஆ.1)** பெற்று சென்றதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

4.2) அ.சா.3 திரு. அருண்குமார் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் தனது சாட்சியத்தில், இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சேட்டு, அவர்களின் கையொப்பம் தனக்கு நன்கு பரீட்சையம் என்பதால் அவருக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 18.11.2025 ம் தேதி, 15.30 மணிக்கு சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சேட்டு அவர்கள் பணிபுரிந்தபோது முன்னதாக சங்ககிரி அரசு மருத்துவமனை மற்றும் திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற ராஜேஸ்வாரி என்பவரின் RTA தகவலின்பேரில், திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த ராஜேஸ்வரி, என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து புகார்வாக்குமூலத்தின் பேரில் சங்ககிரி காவல் நிலைய குற்ற

எண்.499/2025, சட்டப்பிரிவுகள் 281, 125(a) of BNS பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை (**அ.சா.ஆ.2**) பதிவு செய்துள்ளார் என்றும்,

4.3) பின்னர், அன்றைய தினமே, மாலை சுமார் 04.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பெருமாள் மற்றும் பெரியபையன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (**அ.சா.ஆ.3**) தயார் செய்து மாதிரி வரைபடம் (**அ.சா.ஆ.4**) வரைந்து சாட்சிகள் கையொப்பம் பெற்றதாகவும்,

4.4) பின்னர், விசாரணையில் சோமசுந்தரம், த/பெ.தேவராஜ், என்பவர் TN 90 H 7435 என்ற பதிவெண் கொண்ட Hybrid Zeta காரை அஜாக்கிரதையாக ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தியது உண்மையென தெரிந்து அவரை தேடிவந்த நிலையில் கடந்த 21.11.2025 ஆம் தேதி, காலை சுமார் 11.30 மணிக்கு சங்ககிரி காவல் நிலையம் முன்பு வைத்து கைதுக்கான காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுத்துவித்ததாகவும்,

4.5) பின்னர், இவ்வாகன விபத்தில் ஈடுபட்ட வாகனத்தை வேண்டுகோள் கடிதம் மூலம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களின் ஆய்வுக்கு உட்படுத்தி கடந்த 23.12.2025 ம் தேதி, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை (**அ.சா.ஆ.5**) பெற்றதாகவும்,

4.6) பின்னர், விபத்தில் காயமடைந்த ராஜேஸ்வரி என்பவருக்கு சிகிச்சையளித்த திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனை மருத்துவர் திரு.ரதீஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து ராஜேஸ்வரி என்பவரின் விபத்து பதிவேட்டு அறிக்கை (**அ.சா.ஆ.6**) காயச்சான்றிதழ் (**அ.சா.ஆ.7**)பெற்றதாகவும்,

4.7) பின்னர், ராஜேஸ்வரி என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயங்கள் என மருத்துவர் காயச்சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 281, 125(a) of BNS பிரிவுகளிலிருந்து சட்டப்பிரிவுகள் 281, 125(b) of BNS ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (**அ.சா.ஆ.8**) தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும்,

4.8) அத்துடன் இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 281, 125(b) of BNS பிரிவுகளின் கீழ் கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவடைந்த பிறகு எதிரிக்கு பாதகமாக தோன்றக் கூடிய அம்சங்களை தொகுத்து பிரிவு 351 (1)(b) BNSS-ன் கீழ் வினவ எதிரி தான் குற்றவாளி இல்லை என தெரிவித்துள்ளார். எதிரிதரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென கூறியதால், எதிரிதரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாமல் எதிரிதரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

6. தற்பொழுது இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

7. அரசுதரப்பில் அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்கள் குறியீடும் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பட்டியல் சாட்சிகளான 2, 4 முதல் 7 வரையானவர்களை அரசு தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கரவு செய்யப்பட்டுள்ளார்கள். எதிரிதரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்:**

8. இருதரப்பும் கேட்கப்பட்டது வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

9. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அரசுதரப்பு தன் வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தண்டணை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. மாறாக எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தம்முடைய வாதத்தில், அ.சா.1-ன் கவனக்குறைவு தான் இந்த விபத்திற்கு காரணம்

என்றும், எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும், எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் காயம்பட்ட சாட்சி அ.சா.1-ம், கேள்வியுற்ற சாட்சி அ.சா.2-ம், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அ.சா-3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

12) எதிரி மீதான பிரிவுகள் 281, 125(b) of BNS – ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்கும் போது, அரசு தரப்பு வழக்கின்படி, கடந்த 15.11.2025 - ஆம் தேதி 13.00 மணிக்கு சாட்சி-1 ராஜேஸ்வரி என்பவர் சங்ககிரி காவல் நிலைய சரகம் வைகுந்தம் கிராமம் சந்தைப்பேட்டை பிள்ளையார் கோவில் அருகே வைகுந்தம் to கொங்கணாபுரம் செல்லும் ரோட்டின் இடது ஓரமாக கீழே உட்கார்ந்து பூ வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது அதே ரோட்டில் கொங்கணாபுரம் பக்கமிருந்து வைகுந்தம் நோக்கி வந்த எதிரி TN 90 H 7435 என்ற பதிவெண்கொண்ட MARUTHI HYBRID ZETA காரை அஜாக்கிரதையாக ஓட்டிச்சென்று சாட்சி-1 ன் வலதுகாலின் மீது ஏற்றி விபத்தை ஏற்படுத்தி, அ.சா.1-க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தினார் என்பதாகும்.

12.1) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் கடந்த 15.11.2025 - ஆம் தேதி 13.00 மணிக்கு சாட்சி-1 ராஜேஸ்வரி என்பவர் சங்ககிரி காவல் நிலைய சரகம் வைகுந்தம் கிராமம் சந்தைப்பேட்டை பிள்ளையார் கோவில் அருகே வைகுந்தம் to கொங்கணாபுரம் செல்லும் ரோட்டின் இடது ஓரமாக கீழே உட்கார்ந்து

பூ வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது அதே ரோட்டில் கொங்கணாபுரம் பக்கமிருந்து வைகுந்தம் நோக்கி வந்த எதிரி TN 90 H 7435 என்ற பதிவெண்கொண்ட MARUTHI HYBRID ZETA காரை அஜாக்கிரதையாக ஓட்டிச்சென்றுள்ளதும், அப்போது சாட்சி-1 ன் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளதும், இவ்வழக்கு விபத்து சம்பந்தமாக கடந்த 18.11.2025 - ஆம் தேதி அ.சா.1 திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது அ.சா.1-யிடம் சங்ககிரி போலீசார் புகார் வாக்குமூலம் பெற்றுச்சென்றுள்ளது அ.சா.ஆ-1 மூலமும், மேற்படி புகாரின் பேரில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சேட்டு அவர்கள் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதும், பின்னர் அன்றையதினமே சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் (அ.சா.ஆ.3) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.4) தயார்செய்துள்ளதும், வழக்கில் கண்ட வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கை (அ.சா.ஆ.5) பெறப்பட்டுள்ளதும், இவ்வழக்கு விபத்தில் அ.சா.1-க்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் அ.சா.ஆ.7 காயச்சான்றிதழ் மூலமும், மேலும் அ.சா.1-க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால் அ.சா.ஆ.8 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார்செய்யப்பட்டுள்ளது அ.சா.3-ன் சாட்சியத்தின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

12.2) மேற்படி விபத்தின் மூலம் அ.சா.1 - க்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது நிரூபணமாகியுள்ள நிலையில், இவ்வழக்கு விபத்தை எதிரி மேற்படி

வாகனத்தை அஜாக்கிரதையாக ஓட்டிச்சென்று ஏற்படுத்தினாரா என்பது குறித்து பரிசீலிக்கும்போது, இவ்வழக்கின் புகார்தாரரும் காயம்பட்ட சாட்சியுமாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 03 மாதத்திற்கு முன்பாக, வைகுந்தம் சந்தைபேட்டையில் உள்ள பிள்ளையார் கோவில் முன்பு தான் பூ விற்பனை செய்வதற்காக சென்றிருந்ததாகவும், மதியம் சுமார் 01.00 மணியளவில் தான் பூ கட்டிக்கொண்டிருந்தபோது கார் ஒன்று வேறு பாதையில் செல்வதற்கு பதிலாக தான் அமர்ந்திருந்த பாதையில் ஆர்ன் ஏதும் அடிக்காமல் வந்து தன் வலது காலின் மீது காரை ஏற்றிவிட்டதாகவும், தான் தலை குனிந்து பூ கட்டிக்கொண்டிருந்ததாகவும், கார் வேகமாக வந்ததா என்று தனக்கு தெரியவில்லை என்றும், தான் சாலையின் வலதுபுறமாக விநாயகர் கோவில் அருகிலேயே அமர்ந்து கொண்டிருந்ததாகவும், ஆஜர் எதிரி தான் மேற்படி காரை ஓட்டிவந்த நபர் என்றும், பின்னர் அடிப்பட்டவுடன் தன்னை அருகில் இருந்தவர்கள் ஆட்டோவின் மூலம் சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், பின்னர் தன் மகள் மேல்சிகிச்சைக்காக திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனையில் சேர்த்ததாகவும், சாட்சியமளித்துள்ளார்.

12.3) இவ்வழக்கில் கேள்வியுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், சுமார் 03 மாதத்திற்கு முன்பாக தனது அம்மா ராஜேஸ்வரி வைகுந்தம் சந்தைபேட்டையில் உள்ள கோவிலில் நடந்த திருவிழாவில் பூ விற்பனை செய்வதற்காக சென்றபோது கார் ஒன்று அவர்மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும்,

அவரை சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருப்பதாகவும், அருகில் இருந்தவர்கள் தனக்கு போன் மூலம் தகவல் சென்னதாகவும், தான் சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, தனது அம்மாவிற்கு வலது காலில் வீக்கம் ஏற்பட்டிருந்ததாகவும், மருத்துவர்களை கேட்டபோது எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பதாகவும், அவரை மேல்சிகிச்சைக்காக கொண்டு செல்லலாம் என்று கூறியதாகவும், தான் தனது அம்மாவை திருச்செங்கோடு விசாகன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் சாட்சியமளித்துள்ளார். எதிரி தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளை குறுக்கு விசாரனை செய்ய வாய்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

12.4) எனவே மேற்படி பரிசீலனையிலிருந்து எதிரி சம்பவத்தன்று மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று ரோட்டின் வலதுபுறம் ஏறி சென்று அ.சா.1 ன் மீது மோதி விபத்து ஏற்பட காரணமாக இருந்து அ.சா.1 - க்கு கொடுங்காயங்களை ஏற்படுத்தியுள்ளார் என்பது சந்தேகத்திற்கிடமின்றி இவ்வழக்கில் அரசுதரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. இறுதியாக, எதிரிமீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 281, 125(b) of BNS-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் எந்தவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவுசெய்து, எதிரி பிரிவுகள் 281, 125(b) of BNS-ன் கீழ் குற்றவாளியென தீர்மானித்து, எதிரிக்கு பிரிவு 281 of BNS பிரிவின்

கீழான குற்றத்திற்கு ரூ.1000/-அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் இரண்டு வாரம் மெய்க்காவல் சிறைதண்டனையும், பிரிவு 125(b) of BNS பிரிவின் கீழான குற்றத்திற்கு ரூ.5000/- அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் ஒருமாதம் மெய்க்காவல் சிறைதண்டனையும் விதித்து பிரிவு 278(2) of BNSS -ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் ரூ. 6,000/-. வழக்குச்சொத்து இல்லை.

எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்து, இன்று 06.03.2026- ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

SATHIYA S Digitally signed by SATHIYA S Date: 2026.03.06 17:53:41 -0100

நீதித்துறை நடுவர் எண்.1,
சங்ககிரி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:-

| | |
|---|---|
| அ.சா.1 | ராஜேஸ்வரி, புகார்தாரர் மற்றும் காயம்பட்ட சாட்சி |
| அ.சா.2 | கலா, கேள்வியுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.அருண்குமார், காவல் உதவி ஆய்வாளர். |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>:

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 18.11.2025 | புகார்வாக்குமூலம். |
| அ.சா.ஆ.2 | 18.11.2025 | முதல் தகவல் அறிக்கை. |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | 18.11.2025 | பார்வை மகஜர். |
| அ.சா.ஆ.4 | | மாதிரி வரைபடம். |
| அ.சா.ஆ.5 | 08.12.2025 | TN 90 H 7435 என்ற பதிவெண்கொண்ட வாகனத்தின் ஆய்வறிக்கை. |
| அ.சா.ஆ.6 | 15.11.2025 | அ.சா.1-ன் விபத்து பதிவேட்டு அறிக்கை. |
| அ.சா.ஆ.7 | 20.11.2025 | அ.சா.1-ன் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.8 | 23.12.2025 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

சான்றுப்பொருள் : இல்லை.

எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

குறிப்புகள்:

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்துள்ளார்.

2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை.

3) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

SATHIYA S

Digitally signed by SATHIYA S
Date: 2026.03.06 17:53:49 -0100

நீதித்துறை நடுவர் எண்.1,

சங்ககிரி.

JUDICIAL MAGISTRATE NO.I COURT, SANKARI
PRESENT: TMT.S.SATHIYA, B.A.,B.L.,
JUDICIAL MAGISTRATE NO.I, SANKARI
CASE SUMMARY
CC-11/2026, Cr.No. 499/2025, SANKARI POLICE STATION
CNR.No.TNSA-09-000025-2026

| S.No | Particulars | Purpose |
|---|---|---|
| i | The period of remand of the accused | The accused was station bail |
| ii | The date of filing of the Complainant/Final report in the Court | 05.01.2026 |
| iii | The date of Committal of the case to the Court of Session | NIL |
| iv | The date of questioning of the accused as the case may be | 19.02.2026 |
| v | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 317 of the Code | NIL |
| vi | Date of Examination in-chief and cross-examination of a witness | PW1 Chief examined on 03.03.2026 |
| | | PW2 Chief examined on 03.03.2026 |
| | | PW3 Chief examined on 03.03.2026 |
| vii | Date of examination of the accused under section 313 of the Code | 04.03.2026 |
| viii | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; | NIL |
| ix | Grant of stay by superior Courts and the results thereof | NIL |

SATHIYA S
Digitally signed by SATHIYA S
Date: 2026.03.06 17:53:57 -0100

Judicial Magistrate No.I,
Sankari

**JUDICIAL FORM NO. 61**

**(Rule 106 of Crl.R.P)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, SANKARI**

JUDGMENT IN CC.NO. 11/2026

Complainant : சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், சங்ககிரி காவல்நிலையம்.

Accused சோமசுந்தரம்

Offence : U/Sec. 281, 125(b) of BNS

Finding : எதிரி U/Sec. 281, 125(b) of BNS ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டது.

Sentence : எதிரிக்கு பிரிவு 278(2) of BNSS – ன் கீழ் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

Property : வழக்கு சொத்து இல்லை.

| **Serial Number** | **Description of the accused** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **Name** | **Father's Name** | **Caste or Religion** | **Occupation** | **Residence** | **Age** |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | சோமசுந்தரம் | தேவராஜ் | இந்து | - | மாரியம்மன் கோவில் அருகில், நைநாம்பட்டி, ஆட்டையாம்பட்டி, சேலம். | 45 |

| **Date of** | | | | | | | **Explanation of delay** |
|---|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension of appearance | Released on bail | Commencement of trial | Close of trial | Sentence or order | |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 15.11.2025 | 18.11.2025 | 21.11.2025 | 21.11.2025 (Station bail) | 03.03.2026 | 03.03.2026 | 06.03.2026 | - |

SATHIYA S

Digitally signed by SATHIYA S
Date: 2026.03.06 17:54:04 -0100

நீதித்துறை நடுவர் எண்.1,

சங்ககிரி.